25th March 1969]

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. இரண்டு தனிப்பட்ட ஆசிரியர்களைப் பற்றிக் கேட்கப் பட்ட கேள்வி தான் இது.

Chokkeswarar Temple, Kancheepuram

* 210. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Chokkeswarar Temple built by Paranthagan at Kancheepuram is in a dilapidated condition; and

(*b*) whether there is any proposal to renovate the above temple?

சொக்கீஸ்வரர் கோவில், காஞ்சீபுரம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) காஞ்சீபுரத்தில் பராந்தகன் கட்டிய சொக்கீஸ்வரர் கோயில் இடிந்து பாழடைந்துள்ளதா ?

(இ) இக்கோயிலை புதுப்பிக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) ரூ. 6,400 மதிப்பீட்டுச் செலவில் கோவில் திருப்பணி நிறைவேற்றுவதற்குப் புதைபொருள் ஆராய்ச்சித் துறை இயக்குநர் அனுப்பிய செயற் குறிப்புகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. வேலை நிறைவேறி வருகிறது.

Single-teacher schools

* 211. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of single-teacher schools in Tamil Nadu as on 1–11–1968;

(*b*) the teacher-pupil ratio of these schools; and

(*c*) whether there is any proposal to change this system?

மாண்புமிகு திரு எஸ். மாதவன் :

(அ) 2,452.

(இ) 1 : 20

(உ) இல்லை.

THIRU G. KRISHNAMOORTHY : Sir, is there any scheme to just see that plural teaching is avoided in these single-teacher schools?

மாண்புமிகு திரு செ. மாதவன் : ஓர் ஆசிரியர் பள்ளிகளை நாம் திட்டத்தில் ஏற்றுக் கொண்டிருக்கிற வரை, அதைத் தவிர்க்க முடியாது என்று கருதுகிறேன். ஓராசிரியர் பள்ளி சிறு சிறு கிராமங்களுக்குத் தேவையாக இருப்பதால் குறைந்த பட்சம் 20 மாணவர்களாவது இருந்தால் அதை அனுமதிக்கிறோம்.